தினமலர்
உண்மையின் உரைகல்
DINAMALAR
National Tamil Daily

# வன மரபியல் நிறுவனத்தில் உலக சுற்றுச்சூழல் தின விழா

கோவை, ஜூன் 6–

இந்திய வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவன வளாகத்தில், உலக சுற்றுச்சூழல் தின விழா நடந்தது.

முதுநிலை முதன்மை விஞ்ஞானி டாக்டர் கண்ணன் வாரியர் வரவேற்றார். விழாவில், வன மரபியல் நிறுவன இயக்குனர் செந்தில் குமார் பேசியதாவது:

இயற்கை தன்னை தானே புதுப்பித்துக் கொள்ளும் திறன் கொண்டது. மனிதர்களுக்கும், பிற உயிர்களுக்கும் தேவையான அனைத்தையும் இயற்கை அளிக்கிறது. ஆனால், நகரமயமாதல், தொழில் மயமாதல், நவீன வேளாண் முறைகளால், இயற்கைக்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கும் பெரும் சிக்கல்கள் எழுந்துள்ளன. எனவே, இயற்கை வளங்களை பாதுகாக்கவும், சுற்றுச்சூழலில் பல்லுயிர் தன்மையை பாதுகாக்கவும் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். இவ்வாறு, செந்தில்குமார் பேசினார்.

'சுற்றுச்சூழலில் ஊரடங்கின் தாக்கம்' என்ற தலைப்பில், நடத்தப்பட்ட புகைப்பட போட்டி முடிவுகளை, தலைமை விஞ்ஞானி டாக்டர் ஜான் பிரசாந்த் ஜேக்கப் வெளியிட்டார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து 386 பேர், 'பேஸ்புக் லைவ்' மூலம் நேரலையில் இந்த விழாவில் பங்கேற்றனர்.

184. News in Dinamalar, Coimbatore, 06.06.2020, Observance of World Environment Day by IFGTB ENVIS.